
சிவமயம்

குமரகுருபரன்



மலர் 19] 1968-ஆ பங்குனி மீ 1-ம் உ (14-3-68) [இதழ் 3

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. Dr. K. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A B O. L.
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக்கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி தா.
இந்துக் கல்லூரி, திருநெல்வேலி

5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.
அசிஸ்டெண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A, B. L.
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ
சிவ சிவ

பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு

மூவர்தேவாரம் :: தலமுறை

[அடங்கன் முறை]

(ஒன்று முதல் ஏழு திருமுறைகள்)

மார்கழித் திருவாதிரை வெளியீடு; 14—1—1968உ

பெரிய எழுத்தில்-வெள்ளைத் தாளில்-1600 பக்கங்கள்

டெமி சைசு-காலிக்கோ கட்டடம் - விலை ரூ. 8—75

தனிப்பிரதி அனுப்பப் பதிவு அஞ்சல்
தபால் கட்டணம் ரூ. 2—15

மூன்று பிரதிகளுக்குக் குறையாமல் வாங்கும் வெளியூர் அன்பர்களுக்குத் தனிச் சலுகை பின்வருமாறு:-

தமிழக அரசு எல்லைக்குளிருக்கும் எந்த ரயில்வே நிலயத்துக்கும் ரயில்வே கட்டணம் இல்லாமல் அனுப்பப்பெறும். அன்னோர் வாங்கும் புத்தகங்களுக்கு உரிய முழுவிலைத்தொகை M. O. அனுப்புவதோடு, ரயில்வே நிலையத்தின் பெயரும், தங்கள் முகவரியும் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். V. P. P. யில் அனுப்பப்பெற மாட்டாது.

வியாபாரிகள் 20 புத்தகங்கள் வாங்கினால் 20% கழிவு உண்டு. பாக்கிங்-தபால் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்:

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
   நிரந்தரத் தலைவர், 'குமரகுருபரன் சங்கம்'
   ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி ஜில்லா.

2. தியாகராச விலாஸம்,
   53, பிள்ளையார் கோயில்தெரு,
   திருவேட்டீஸ்வரன் பேட்டை, சென்னை-5.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 19 || பிலவங்க ஞு பங்குனித் திங்கள் 1-ம் உ[14-3-68] || இதழ்-3

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 16)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

"கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வம் எனப்படும் — இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்." (16)

கற்றவரும் செல்வரும் வணக்கம் உடையவராயிருத்தல் வேண்டும் என்பது இதன் உட்கோள்.

கல்வியை உடைமை பொருளையுடைமை என்ற இரண்டும் (தலையாய) செல்வம். அவ்விரு செல்வமும் செல்வம்

என்று சிறப்பித்துச் சொல்லிக்கொள்ளப்படும். மற்றவற்றை அத்துணைச் சிறப்புடைய செல்வமாகக் கொள்ளல் இல்லை என்றபடி. அப்படிக் கொள்வதும் வணக்கம் அச்செல்வர் பால் இருந்தாற்றான். இன்றேல் அவ்விரண்டும் அவர்க்கும் செல்வமாகா. மதித்துக் கொள்வாராலும் செல்வம் என்று சிறப்பித்துக் கொள்ளப்படா. அவ்விரு செல்வர்க்கும் இன்றி யமையாது வேண்டற்பாலது ஒன்றே. அதுதான் கல்வியும் பொருளும் இல்லாதார் அவற்றை உடையாரது முன்னின்று தம் குறைவேண்டிக் கொள்ளுங்கால் தலைவணங்கித் தாழு மாறுபோலத் தாமும் (கற்றோரும் பொருள் பெற்றோரும்) தலைவணங்கித்தாழ்தல்.

இறைவனிடத்தில் வேண்டல் இருதிறம். ஒன்று முறை வேண்டல் மற்றொன்று குறைவேண்டல்.

'காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்' (386)

என்றதனுரை விளக்கத்திற் பரிமேலழகர் எழுதிய உரையைக் காண்க. அவ்விளக்கம் இது:—

"முறைவேண்டினார் வலியரான் நலிவெய்தினார்.
குறைவேண்டினார் வறுமையுற்று இரந்தார்"

அவ்விரண்டனுள், குறையிரத்தல் (குறைவேண்டல்) உடையார் முன் இல்லார் ஏக்கறுதல் என்று (395) பின்னர்க் குறிக்கப்பட்டது. 'உடையார்' பலருள் அரசரும் அடங்கு வர். இல்லார் 'வறுமையுற்றிரந்தார்' எனமேற்சொல்லப்பட் டவர். இல்லார் உடையார் என்பன மறுதலைப்பெயர். அவை உலகவழக்கு. 'செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஏக்கற்று நின்றுங்கற்றார் தலையாயினார்' எனப் பரிமே லழகர் உரைத்தார். 'இல்லார் உடையார்' என்னும் பெயர் முறையே செல்வரையும் வறியரையும் உணர்த்துதல் வேண் டும் என்றும் நியதி அவற்றிற்கு இல்லை. உலகம் செல்வமில் லார் செல்வமுடையார் என்று கொண்டுவழங்கிய வழக்கமே அப்பொருளை (அவ்விருபெயரும் முறையே) உணர்த்தற்கு ஏதுவாயிற்று. ஆகவே அச்சொற்கு அப்பொருளே உரித் தன்று, அறிவில்லார் அறிவுடையார், மடமில்லார் மடமுடை

யார், நோயில்லார் நோயுடையார் என்பனவும் இவைபோல் வனவும் இல்லார் உடையார் என்ற சொல்லின் பொருளாதல் கூடும். இன்மை உடைமை இரண்டும் பொருட்கே உரியன அல்ல, ஏனை இடம் காலம் சினை பண்பு தொழில் முதலிய பொருள்வகை யெல்லாவற்றோடும் பொருந்தலாவன. ஆத லாற்றான், பரிமேலழகர் "உடையார் இல்லார் என்பன உலக வழக்கு" என்று எழுதினர். பரிமேலழகருரை யாழங்காண வல்லராதலை ஒழித்து வல்லாராதலை வெளிப்படுத்தும் புல வரும் இக்காலத்திற்பலராயுளர். அவர்க்கு அறிவுகொளுத் தும் ஆற்றல் ஆண்டவனுக்கும் உண்டோ? இன்றோ? தெரியாது.

ஆசிரியர் குமரகுருபர முனிவர் இந் நீதிநெறி விளக்கச் செய்யுளிற்பொருளை அமைத்ததிறம் அறிவுசான்ற எல்லாரா லும் மிகப்போற்றத்தக்க தொன்றாகும். அதனை அறியவேண் டின், திருக்குறளில் திருவள்ளுவர் இத்திறத்திற் கொண்ட கருத்தை நன்குணர்தல் வேண்டும்.

கல்வி

இல்லார் குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும் தலைவணங்கித் தாழப்பெறின், கல்வியுடைமை யென்ற செல்வ மும் செல்வம் எனப்படும்.

பொருள்

இல்லார் குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும் தலைவணங்கித் தாழப்பெறின், பொருளுடைமை யென்ற செல்வமும் செல்வம் எனப்படும்.

இங்கு இவ்வண்ணம் கல்விக்கும் பொருளுக்கும் ஒரே உவமையைக் கொண்டு, தலைவணங்கித் தாழப்பெறுதல்.

கல்விச்செல்வம் பொருட்செல்வம் உடையார் இருதிறத் தவர்க்கும் இன்றியமையாதது என்று உணர்த்தியருளினர் குமரகுருபர முனிவரர். இம்மஹா சாமர்த்தியம்—பேராற்றல் பாவலர் எல்லார்க்கும் வாய்ப்பது அரிதே. புலவராயிருக்கும் பாவலர்க்கும் எளிதன்று. நினைவாற்றல், அருள்வலிமை முதலியன வாய்ந்த பாவலர்க்கே எளிது.

திருவள்ளுவர் 'கல்வி' என்னும் அதிகாரத்தில் வரும் 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார் கடையரே கல்லா தவர்', என்னுங் குறளிலே எடுத்துக்காட்டிய வுவமை யைக் கல்விக்கு மட்டும் காட்டலாகும். பொருட்குக் காட்ட முற்படார் எவரும். பொருளில்லார் பொருளுடையார்முன் ஆசையாற்றாழ்ந்து நின்று இரத்தல் போலக் கல்வியில்லார் கல்வியுடையார் முன் ஆசையாற்றாழ்ந்து நின்று இரந்து கற்றல் வேண்டும். ஆசிரியர்முன் மாணுக்கர் தலைவணங்கித் தாழ்ந்து நின்று கற்றல் வேண்டும். இந்நிலையைச் செல்வத்திற்குப் பொதுவாயும் கல்விக்கும் பொருட்கும் சிறப்பாயும் பொருத் திக்காட்டுதல் திருவள்ளுவர் கருத்தேயாம். ஆயினும் அது வெளிப்படத் திருக்குறளில் இல்லை. ஆய்ந்து ஆழ்ந்துணர் வார்க்கே அது புலப்படும். ஆசிரியர் குமரகுருமுனிவர் இரண் டனையும் ஓரிடத்தில் இயைத்து ஒருவமையைக் காட்டி விளக் குவது திருவள்ளுவர் கருத்துக்கு மாறுபட்டதாயின், அது செய்யார். செய்யத்துணியார்.

இச்செய்யுட்குத் தமிழ்த்தெய்வம் எழுதியுதவிய குறிப் புரையில், "அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்பத னுல் கற்றாருக்கும் "எல்லார்க்கும் நன்றும்பணிதல், அவருள் ளும் செல்வர்க்கே செல்வம்தகைத்து" என்பதனுல், செல் வருக்கும் பணிவுடைமை வேண்டும் என்று பெரியாரும் பணித்தனர்" என்றுளது. இதுவே யாவரும் உணரத்தக் கது இங்கு.

உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார் தலை யாயினர். அவ்வாறு நின்று கல்லார் கடையரேயாவர். பரி மேலழகர் அந்நிலைக்கு நாணிக்கல்லாதவர் என்றுரைத்த உண் மையை ஆசிரியர்பலர் தம் அநுபவத்திற்கண்டிருப்பர். எம் மாணுக்கருள் ஒருவர், தம்மாணுக்கர்க்குத்தெரியாதவாறு, தாம் ஐயுற்ற பாடற்பொருளைத் தெளிந்து கொள்ளற் பொருட்டு, நாம் ஊர்க்கு வெளியே சென்றுலாவும்போது அந்நூலொடு போந்து, பலர் அறியப்பாடங் கேட்பது நாணம் உண் டாக்குதலால் இங்குக் கேட்டுக் கொள்ளவந்தேன் என்று சொல்லி, அதன் பொருளைக் கேட்டறிந்தார். அவர் கல்வியிற்

சிறவாது புள்ளி நீங்கிய கல்வியிற்சிறந்து பல்லும் போய்ச் சொல்லும் போய் உடலால் முதியார்யுள்ளார்.

பரிமேலழகர் உரைத்தவாறு "செல்வர் முன் நல்கூர்ந் தார் நிற்குமாறுபோல நிற்கும் அங்நிலைக்கு நாணிக் கல்லாதார் என்ஞான்றும் இழிந்தாரேயாவர்".

"பெருமிதம் இன்றி அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும், அவ்வெல்லாருள்ளும் செல்வம் உடை யார்க்கே வேறு ஒரு செல்வமாஞ் சிறப்பினை உடைத்து." "பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியும் குடிப்பிறப்பும் உடை யார் அஃது (அப்பெருமிதம்) இன்றி அவைதம்மானே அடங் கியவழி அவ்வடக்கம் சிறந்து காட்டாது ஆகலின், செல் வர்க்கே செல்வந்தகைத்து என்றார். செல்வந்தகைத்து என் பது (செல்வந் தகைத்து என) மெலிந்து நின்றது. பொது என்பாரையும் உடம்பட்டுச் சிறப்பாதல் கூறியவாறு." இவ் வளவும் அடக்கம் உடைமைக்கு அறிவித்தவாறு. அஃதாவது தலைவணங்கித் தாழப்பெறலை விளக்கியவாறாகும்.

தலைவணங்கித் தாழப்பெறாதவராயின், கல்வியுடைமை யும் பொருளுடைமையும் அவர்க்குச் செல்வத்தகைமையை யும் அடைவியா. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் ஆகிய பொதுமையும் இன்றிப்போம். செல்வம் எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் நிலை அவ்விருடைமைக்கும் இல்லையாம் என்றபடி.

'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்' என்று மட்டும் திருக்குறளில் உளது, 'கடையரே கல்லா தவர் என்றுள்ளதால் 'தலையாயினர்' என்னும் ஒருசொல் வரு விக்கப்பட்டது. அதனைப் பரிமேலழகர், தம் உரை விளக்கத் திலே, 'கடையர்' என்றதனான் அதன் மறுதலைப் பெயர் வரு விக்கப்பட்டது என்றெழுதினார்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்'

என்றதனுரையிலே, "சேர்ந்தார் என்பது சொல்லெச்சம்". என்றெழுதினார் உரையாசிரியர். இதுவும் மறுதலைப்பெயரே ஆயினும், கடையர் தலையர் என்பன போல்வன அல்ல,

சேர்ந்தார் உடன்பாட்டு வினையால் உண்டானபெயர். சேரா தார் மறைவினையால் உண்டானபெயர். தலையர்க்குக் கடை யர் மறுதலையே அன்றி எதிர்மறை அன்று.

'அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை'

என்றதனுரையிலே உணரப்படும் என்பது சொல்லெச்சம்.

'பெற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு'.

என்றதனுரையிலே, வழிபடுதல் என்பது சொல்லெச்சம். வழிபடுதல் பெறின் என்க.

'நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்'.

என்றதனுரையிலே 'குடிபொன்றி' என்றதற்குக் குடியைப் பொன்றுவித்து எனக்கொண்டு குடியைக் கெடச்செய்து என உரைத்து. 'செய்து' என்பது சொல்லெச்சம் என்றமை காண்க.

'துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு'

என்றதனுரையிலே, செய்வது என்னைகொல் என்றுரைக்க வேண்டும் என்ருர். 'செய்வது' என்பது சொல்லெச்சம்.

'நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.'

என்றதனுரையிலே, 'சொல்லுமாயின்' என்பதும் 'அவர் மாட்டு' என்பதும் எச்சமாக வருவிக்கப்பட்டன. பல்லா ரகத்துச் சொல்லும் ஆயின், எனவும் அவர்மாட்டு நயன் சாரா நன்மையின் நீக்கும் எனவும் உரைத்தல் வேண்டும்.

'கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை',

என்றதனுரையிலே பொறை ஆதற்கே என்றுரைத்த பரிமே லழகர் 'ஆதற்கு என்பது சொல்லெச்சம்' என்ருர்.

"குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்,"

என்றதனுரையிலே, 'நோக்கி என்பது சொல்லெச்சம்' என்றுரைத்தார். இவ்விடங்களிலும் இன்னோரன்ன பிற இடங்களிலும் பொருள் பெற்றுச் சொற்பெருமையான், சொல்லெச்சம் எனப்பட்டன. அவ்வாறே தலையாயினர் என்பது 'கடையர்' என்ற இடத்திற்பெற்றே உரைக்கத்தக்கது.

'கற்றறிந்தார் கண்டது அடக்கம்' 'அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா' 'செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்கப்பெறின்' என்பவற்றைக் காட்டினும் குற்றமில்லை. 'நல்கூர்ந்தமக்கட்கு அணிகலமாவது அடக்கம்' என இங்குக் காட்டலாமோ?

(தொடரும்)

சிதம்பர மும்மணிக்கோவை

உரைநடை

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்,
பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

காப்பு

செம்மணிக்கோ வைக்கதிர்சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
மும்மணிக்கோ வைக்குவந்து முன்னிற்கும் – எம்மணிக்கோ
அஞ்சக் கரக்கற்ப கத்தார் இறைஞ்சுமஞ்சு
கஞ்சக் கரக்கற் பகம். 1

சிவந்த மாணிக்கக் கோவைகளின் ஒளி சூழ்ந்த தில்லைச் சிற்றம்பலவனது மும்மணிக் கோவையாகிய இந்நூலுக்கு மகிழ்ந்து, எமது கவுத்துவ மணி மார்பினனாகிய திருமாலும் அன்னக் கொடியைக் கையில் ஏந்தியவனாகிய பிரமனும் கற்பகச் சோலையை யுடையவனாகிய இந்திரனும் முதலியோர் வணங்குகின்ற, தாமரை மலர் போன்ற ஐந்து திருக்கரங்களை யுடைய கற்பக விநாயகர் முன்னின்றருளுவார்.

நூல்

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்தபொற் கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் ஊன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே

இத்தொழில் ஐந்துநின் மெய்த்தொழில் ஆகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தநின் அமுதவாக் களித்த
நல்லற நூல்களில் சொல்லறம் பலசில
இல்லறம் துறவறம் எனச்சிறந் தனவே
அந்நிலை இரண்டினுள் முன்னது கிளப்பில்
கற்றநூல் துறைபோய்க் கடிமனைக் கிழவன்
நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியோ
டன்பும் அருளும் தாங்கி இன்சொலின்
விருந்து புறந்தந் தருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியும் ஆற்றி இவ்வகை
நல்லறம் நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவான் அறன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளில் மகப்பேறு குறித்துப்
பெருநலம் துய்க்கும் பெற்றித் தன்றே
மற்றையது கிளப்பின் மனையறம் நிரப்பி
முற்றுணர் கேள்வியின் முதுக்குறை வெய்திப்
பொருளும் இன்பமும் ஒரீஇ அருளொடு
பொறையும் ஆற்றலும் நிறைபே ரொழுக்கமும்
வாய்மையும் தவமும் தூய்மையும் தழீஇ
ஓரறி வுயிர்க்கும் உறுதுயர் ஓம்பிக்
காலோய் நடையன் ஆகித் தோலுடுத்
தென்பெழும் யாக்கையன் துன்புறத் துளங்காது
வரையும் கானும் எய்திச் சருகொடு
கானீர் அருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீர் அழுவத் தழுங்கி வேனிலில்
ஐவகை அழலில் மெய்வருந்த வருந்தி
இவ்வகை ஒழுகும் இயல்பிற் றன்றே, அதனால்
இந்நிலை இரண்டும் எம்மனோர்க் கியலா
நன்னிலை ஆகலின் அந்நிலை நிற்றற்
குரனும் ஆற்றலும் இன்றி வெருவந்
தெளிதினில் தமியனேன் அரியதுபெறுதற்
குளதோ நெறியென் றுணர்த்துமின் நீரென
முத்தலம் தலங்களுண் முத்தித் தலமா

இத்தலம் உடைத்தென இசைத்தனர் சிலரே
அறிஞராங் குரைத்த உறுதிக் கட்டுரை
உலகியல் வழக்கும் புலனெறி வழக்குமென்
றிருவகை வழக்கினும் நிலைபெற் றன்றே, அவற்றுள்
ஆருர்ப் பிறத்தல் நேர்படின் அல்லது
செயற்கையின் எய்தும் இயற்கைய தன்றே, அதாஅன்று
காசியில் இறத்தல் நோக்கித் தேசம்விட்
டறந்தலைத் தந்த அரும்பொருள் தாங்கிப்
பிறன்பொருள் கொள்ளாப் பேரறம் பூண்டு
கழிபெரும் கானம் நீங்கி வழியிடைத்
தீப்பசிக் கிரங்கி நோய்ப்பனிக் கொதுங்கிப்
பல்பிணிக் குடைந்து செல்லும் காலத்
திடைச்சுரத் திறவா தின்னுயிர் தாங்கிக்
கிடைத்தனன் ஆயின் அடுத்தால் ஒழுக்கமோ
டுடல்விடு காறுமத் தடநகர் வைகி
முடிவது கடைபோக முடிவதோ அரிதே, அதனால்
சிற்றுயிர்க் கிரங்கும் பெரும்பற்றப் புலியூர்
உற்றநின் திருக்கூத் தொருகால் நோக்கிப்
பரகதி பெறுவான் திருமுன் பெய்தப்
பெற்றனன் அளியனேன் பற்றிலன் ஆயினும்
அன்பிலை கொடியையென் றருளாய் அல்லை
நின்பதம் வழங்குதி நிமலவென் றனக்கே
மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி ஒருவன் அருவருப் புறீஇத்
தன்முகம் சுளித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகும் ஆயினும் மருந்திரு வருக்கும்
தீப்பிணி மாற்றுதல் திண்ணமே அன்றி
னொதுமலும் பகையும் போக்கி ஒருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க் குதவல்
வழக்குமன் றைய மன்றுடை யோர்க்கே. 2

பூக்கள் நிறைந்த கற்பகப் பொழிலையுடைய தேவலோகமும், அச்சத்தைத் தருகின்ற கடல்நீர் சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலாகிய நால்வகை நிலப்பரப்பும், மற்றைப் புவனங்களும் அங்கு வாழ்கின்ற எண்ணற்ற உயிர்த்தொகுதிகளும் ஆகியவற்றை பிற தொடர்புகளின்றித் தானாகவே படைத்தது உனது உடுக்கையேந்திய கை. அங்ஙனம் தனித்தனியாகப் படைக்கப் பெற்ற இயங்

கியலும் நிலையியலுமுடைய பொருட் பகுதிகள் அனைத்தையும் காப்பது, உனது அழகிய அபயத்திருக்கரம். தோன்றி நின்ற அந்தப் பழய உலகம் முழுவதையும் ஒடுக்குவது பெரிய நெருப்பை ஏந்திய ஒப்பற்ற திருக்கை. உயிர்கள் ஈட்டிய வினைப்பயன் முழுவதையும் சிவபோக நுகர்ச்சியை மறைத்து நின்று அவைகளுக்கு ஊட்டுவது உனது ஊன்றிய திருவடி யாகும். சத்திநிபாதமுற்ற மேலான உயிர்களுக்கு அளவில் லாத பேரின்பத்தை வழங்குவது முதல்வனே! உனது தூக் கிய திருவடி. இந்த ஐந்து தொழில்களும் உனது உண்மைத் தொழில்களாக; பால் மட்டுமே உண்ணுகின்ற இளங்குழந் தையினது பசிய குடர் பொறுக்கமாட்டாதென்று, கொடிய நோயை உண்ணும் மருந்தை அதன் தாய் அருந்ினுற் போல நிலைபெற்ற உயிர்த் தொகுதிகளுக்கு இனிய திருவருள் கிடைப் பதற்காக உலகத்தை ஈன்று காத்த தெய்வக் கற்பையும் திரு வருட் கருவையும் கொண்டவளும் அழகிய செவ்வரி படர்ந்த அகன்ற கண்களையும் பேரழகு பொருந்திய சாயலையும் உடையவளும் திருந்திய அணிகலன்களைப் பூண்ட வளுமாகிய சிவகாமவல்லி காணச் சிற்சபை பொலியும்படி திருநடம் புரி கின்ற அற்புதக் கூத்தனே! உனது அமுத மொழியளித்த நல்ல வேதாகமங்களாகிய அருள்நூல்களில் சொல்லப்பெற்ற அறங்கள் பல. அவற்றுள் இல்லறம், துறவறமென்னும் இரண்டும் சிறந்தன. அவ்விரண்டு அறங்களுள் முன்னதாகிய இல்லறத்தைப் பற்றிப் சொல்லுவதானுல், முறையாகக் கற்ற நூல் வழியே ஒழுகிப் பாதுகாவலையுடைய வீட்டுத்தலைவன், நற்குணங்கள் நிறைந்த கற்புடைய மனைவியுடன் அன்பும் அருளும் உடையவனுகி, இன்சொல்லுடன் விருந்தினரைப் பேணி அரிய தவவாழ்க்கையுடையாரை ஆதரித்துக் கடவுள், தெய்வங்கள், பூதங்கள், பிதிர்க்கள், மானிடர் ஆகிய ஐவருக் கும் செய்யும் கடமைகளாகிய வேள்விகளை ஆற்றி இவ்வகை யில் நல்ல அறத்தை நிறைவித்துப் பல வகைகளிலும் புகழை நிலைநாட்டிப் பிறன்மனை நயவாதவனுய் இல்லற வாழ்க்கைக்கு விதிக்கப்பட்ட நாட்களில் மகப்பேறென்றையே குறிக்கோ ளாகக் கொண்டு மனைவியுடன் இன்பம் நுகரும் இயல்பின தாகும். மற்றென்றாகிய துறவறத்தைப் பற்றிச் சொல்லுவ

தாளுல் அனைத்தையும் உணர்ந்த கேள்வியினுல் பேரறிவு பெற்றுப் பொருளையும் இன்பத்தையும் விடுத்து அருளையும் பொறுமையையும் புலன்வழிச்செல்லா உளவலியையும் நிறைந்த பெரிய ஒழுக்கத்தையும் வாய்மையையும் தவத்தையும் தூய்மையையும் கைக்கொண்டு ஓரறிவுயிர்களாகிய மரஞ் செடி கொடி களுக்கு உண்டாகின்ற துன்பத்தையும் பாதுகாத்துக் கால்கள் நிலத்திற்படாது பாதரட்சையிற் படும் நடையுடையவனுய்த் தோலாடையை உடுத்து என்புகள் எழுந்து தோன்றும் உடம்புடையவனுய்த் துன்பம் வரும்பொழுது கலக்கமடையாமல் மலைகளையும் காடுகளையுமடைந்து தங்கிச் சருகு, காற்று, தண்ணீர் ஆகியவற்றை உண்டு கொடிய பனிக்காலத்தில் பெரிய நீர்ப்பறப்பில் இருந்து குளிரைப் பொறுத்தும் வேனிற்காலத்தில் நாற்றிசைகளிலும் உச்சியிலும் சுடுவதாகிய பஞ்சாக்கினி மத்தியிலிருந்து உடல் வருந்த வருந்தியும் இவ்வகையாக ஒழுகுகின்ற இயல்பையுடையது; அதனுல் இந்த இருவகை அறங்களும் எம்போல்வார்க்கு இயலாதனவாயுள்ள நல்லறங்களாயிருத்தலின் அந்த அறங்களைக் கடைப்பிடிப்பதற்குரிய உளவலியும் உடல்வலியுமின்றி அச்சங்கொண்டு அடியேன் எளிமையான முறையில் அருமையானதைப் பெறுதற்குரிய சிறந்த நெறியொன்றை உணர்த்த வேண்டுமென்று ஆன்ருேர் சிலரைக் கேட்க, அவர்கள் இந்நிலவுலகத்திலுள்ள திருத்தலங்கள் பலவற்றுள் மூன்று திருத்தலங்கள் முத்தித் தலங்களாக வுள்ளன; என்று அருள்செய்தார்கள். அந்த மெய்ஞ்ஞானியர் கூறிய அவ்வுறுதிமொழி உலகியல் வழக்கு நூல்வழக்காகிய இருவகை வழக்கிலும் நிலைபெற்றதாகும். அவற்றுள் திருவாரூரிற் பிறத்தலென்பது முன்னை நல்லூழினுல் அமைந்தாலல்லது நாமாகச் செய்துகொள்ளும் இயல்புடையதன்று. அது நிற்க: காசியில் இறப்பதை விரும்பிப் பிறந்த இடத்தை விட்டு அறவழியிலீட்டிய அரும்பொருளைக் கைக்கொண்டு பிறர்பொருள் கொள்ளாப் பேரறத்தைக் கடைப்பிடித்துப் பெரிய இடைச்சுரத்தை நீங்கி வழியில் உண்டாகின்ற கொடும் பசிக்கு இரங்கித் துயரம் விளைக்கின்ற குளிருக்கு ஒதுங்கிப் பலவகையான நோய்களுக்கு வருந்தி வழியிடையில் இறந்துபடாமல் இனிய உயிரைத் தாங்கிச்

சென்று காசியை அடையும் பேறு கிடைக்கப் பெற்ருனுயி னும் பொருந்திய நல்லொழுக்கத்துடன் உடல் நீங்கும்வரை அந்தப் பெருநகரத்தில் வாழ்ந்து எடுத்த காரியம் நிறைவே றும்படி அமைவதோ; அருமையானதாகும். அதனுல் சிற் றுயிர்களுக்கு இரங்குகிற பெரும்பற்றப் புலியூரில் நிகழுகின்ற உனது திருக்கூத்தை ஒருமுறை தெரிசித்துப் பரகதி பெறுங் குறிப்பில் சந்நிதானத்தில் வந்து அடையப்பெற்றேன். சிறி யேன் உன்பால் பற்றில்லாதவனுயினும் அன்பில்லாதவன்: கொடியவன் என்று அருள்புரியாதிருக்க மாட்டாய். நிமலனே! எனக்கு உனது திருவடிப் பேற்றை வழங்குவாயாக. மருந் துண்ணும் விருப்பமுடையவன் மனமகிழ்ந்து அதனை உண் டாலும் உண்ணும் பொழுது ஒருவன் அருவருப்படைந்து தனது முகத்தைச் சுளித்துத் தலைநடுக்கங் கொண்டுக் கண் ணீர் பெருக்கித் துன்புற்று உண்டாலும். வாய்வழிச் செல்லு மானுல் இந்த இருவருக்கும் கொடிய பிணியை மாற்றுதல் திண்ணமே. அல்லாமல் அயலையும் பகையையும் விட்டு ஒரு பொருளை சிறந்த கிளைஞருக்கு உதவுதல் பொதுமன்றம் உடையவர்களுக்கு வழக்குமாகாது.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஆறுந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

(மலர் 19. இதழ் 2-ன் தொடர்ச்சி)

இறைவன் மானிடவடிவே குரு
Guru is God in human form

20. தானவனுகிச் சொருபத்து வந்திட்டு
ஆன சொருபங்கள் நான்கும் அகற்றின;
ஏனைய முத்திரை யீந்தாண்ட நன்னந்தி
தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே.

He assumed human form,
Discarding divine forms four,
And HimSelf as exalted Guru came:
And bestowed on me the seal of Gnana:
He, Nandi, my goodly Saviour;
Bless me, it was he who of yore planted his feet of Grace on me.

இறைவனே மானிட வடிவந்தாங்கி குருவாக வந்தான்; தனக்குரிய நான்கு வடிவங்களையும் களைந்துவிட்டான். பின்னே சின்முத்திரையை அளித்து என்னை ஆட்கொண்டான், நல்லவனுகிய நந்தி. அவன்தன் திருவடிகளை முன்னே என் தலைமீது வைத்ததுண்மையே.

குறிப்பு. வரி 2. சொருபங்கள் நான்கும் – சகளம், நிட்களம், சதாசிவம், பரசிவம் ஆகிய சொருபங்கள் நான்கும்.

குரு சிவத்தோடு ஒன்றவைத்தான்
The Guru united me in Sivam

21. உரையற் றுணர்வற் றுயிர் பரமற்றுத்
திரையற்ற நீர்போற் சிவமாத நீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொருபத் திருத்தினன் சொல்லிறந்தோமே.

There was neither speech, nor feeling
Neither self, nor Our - self;
Like unto a sea where no wave lasheth.
He made me unite in Sivam;
And he granted me the boundless form
That transcends the four forms
And lo! it was beyond all words.

சொல்லிழந்தேன்; உணர்விழந்தேன்; நான் அவன் என்ற பேதமிழந்தேன். அசைவில்லா நீர்போல் அமைதிபெற்றேன். இங்ஙனமாக என்னைச்சிவமாக்கினன். பின்னே சத்தாதி நான்கும் கடந்த எல்லையற்ற சொரூபத்தில் என்னை இருத்தினன். அந்தநிலையைச் சொல்லுந்தரமிழந்தேன்.

குறிப்பு, வரி 3. *சத்தாதி நான்கும் – சத்து, அசத்து, சதசத்து, பர சத்து என்ற நான்குநிலைகளும்.*

குரவன் என்னை உய்யக்கொண்டான்
Gurupara worked for my redemption

22. குரவ னுயிர்முச் சொரூபமுங் கைக்கொண்
டரிய பொருண்முத் திரையாகக் கைக்கொண்டு
பெரிய பிரானடி நந்திபேச் சற்று
வுருகிட வென்னையங் குய்யக் கொண்டானே,

My divine preceptor Nandi
Assumed life's all forms three;
He set on me the seal of Gnana
And drew me to his feet so godly;
Bereft of speech, I melted in bliss
Thus did he work my redemption eternal.

உயிரினுக்குரிய மூன்று வடிவுகளையும் தாங்கி, ஞான சின்முத்திரையைக்காட்டி, நான் பேச்சிழந்து பேரின்பத்தில் உருகிட, குரவனும் நந்திப்பெம்மான் என்னைத்தன் திருவடியில் உய்த்து ஆட்கொண்டான்.

குறிப்பு. வரி 1. *உயிர்முச்சொரூபம் – ஆன்மாவுக்குரிய, தூல, சூக்கும, காரண உருவங்கள் என்ப. உரு, அரு, அருவுரு என்பர் மேலே எட்டாந்தந்திரத்தில்.*

சிவனை க்குருபரன் சிவமாக்கியது
How Guru transformed Jeeva into Siva

23. பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே.

He cleansed me of my blemishes,
Transformed me into Sivam Supreme,
And immersed me into His bliss infinite;
— Bliss that is beyond beyond words!
The fire of Grace that scorcheth not
Yet drank dry the three seas of mine impurities,
And annihilating my primal ego to its traces
He granted me his feet of grace;
And there doth he abide for ever with me.

என்குற்றம் களைவித்து, என்னைச்சிவமாக்கி, பேரானந் தத்தில் அழுந்த வைத்தான், வெப்பமே யில்லாத இறையருட் சுடர், என்பாசக்கடல் மூன்றையும் வற்றக்குடிக்க, அனுதி யான என் ஆணவமலம் அழிய, அவன் தன் திருவடிகளை நல்கி அருளி, என்னோடேயே நிலைத்து நிற்கின்றான்.

குறிப்பு வரி 2. *மாச்சற்ற – மாசற்ற; மாள்வித்து – அழுத்தி*

3. *காச்சு – வெம்மை; கடன் – தீர்க்க முடியாதபார மாக உயிரைத் தொடர்ந்துவரும் மும்மலங்களாகிய கடன்எனினுமாம்.*

4. *வாச்ச – வாய்த்த; புகழ் – வாசனுமலம்.*

(தொடரும்)

ஞானப்பழம்

புலவர், திரு. வே. அரசு அவர்கள்,
தமிழாசிரியர், எளச்சிபாளையம்.

(மலர் 19. இதழ் 2-ன் தொடர்ச்சி)

படைப்புத் தொழிலைச் செய்வதற்கு வேண்டிய நிறைந்த கல்வியறிவு பெற்றிருக் கின்றீரா ?

ஆம், வேதங்களை எல்லாம் குறைவறக் கற்று முடித் திருக்கின்றேன்.

அப்படியா ? உமக்கு ''ருக் வேதம்'' வருமா ?

நன்ருகத் தெரியும்.

அதற்குப் பொருள்.

அதுவும் நன்ருக அறிவேன்.

அவ்வாருயின் தொடங்குங்கள் - பார்ப்போம், பிரம்மன் தொடங்கினுன், ஓம்.

நிறுத்தும். அந்த ஓம் என்ற சொல்லுக்குப் பொருள் சொல்லும். நான்முகன் ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

ஏன் தயக்கம்!

அது சொல்லமுடியாத ஒன்று.

ஓ! தெரியாது என்று சொல்லும். பொருள், முடியாதது அல்ல. வேதப்பொருளை அறியாத நீ உலகங்களை எவ்வாறு படைக்கமுடியும்.

ஒன்றும்நீ அறிகிலாதா யோதிய வேதமென்கொல்?
பொன்திக ழண்டமெல்லாம் பூத்ததும் என்கொல்?

என்று சொல்லிப், பாடம் சொல்லாத மாணுக்கனை ஆசிரியர் குட்டுவது போலத் தலையில் குட்டினுன் குமரக்கடவுள். பிறகு, தமது பூதகணத்து வீரனெருவனை நோக்கி, ''இவரைக் கூட்டிச் சென்று சிறையிலே தள்ளுங்கள். இனி, நாமே படைத்தல் தொழிலைச் செய்வோம்'' என்று தொடங்கினுர்.

முருகப்பெருமான் சினந்து நான்முகனைத் தண்டித்துச் சிறைப்படுத்தி விட்டமையைத் தேவர்களெல்லாரும் அறிந்

தார்கள். திருமாலிடம் சென்று முறையிட்டார்கள். திருமால் தேவர்களுடன் கூடச்சேர்ந்து சிவபெருமானிடம் அடைந்து பிரமனின் விடுதலைக்காக வேண்டிக்கொண்டார். சிவபெருமானும் குமரன் செய்தது தவறு என்றுகூறுவார் போலச்சினந்தார். முருகனை அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டார். குழந்தை முருகனும் கால்களிலுள்ள சதங்கைகள் மறைஒலிபோல் ஆரவாரம் செய்ய வருகின்றான் தந்தையின் பக்கத்திலே.

> **வந்ததாள் சதங்கை கோடி**
> **மறைகள்போல் முறையிட் டார்ப்ப**
> **சிந்தையி லுவகை பொங்கத்**
> **திருவடி பெயரா நிற்கும்**
> **கந்தனை வெகுண்டான் போலக்**
> **கழறியே கலைகள் தேரும்**
> **கொந்தவிழ் கமலன் தன்பால்**
> **கொண்டதோர் குறைகூ றென்றான்.**

"குழந்தாய்! படைத்தற் கடவுளிடத்திலே என்னகுறை கண்டாய்? அவர் சிறைப்படவேண்டிய பெரிய தவறு என்ன செய்துவிட்டார்? சொல்"

"அப்பா! ஓம் என்னும் பிரணவ மந்திரத்திற்கு உண்மைப் பொருள் என்ன என்று கேட்டேன். கிளிப்பிள்ளை போல மந்திரத்தை மட்டும் சொல்லும் அவருக்குப் பொருள் சொல்லத் தெரியவில்லையே".

பிரணவ மந்திரப்பொருள் சொல்லமுடியாத ஒன்று. எல்லோருக்கும் அது தெரிந்திருக்க முடியாது.

"பிரணவப்பொருள் தெரியாதவர் படைப்புத் தொழில் செய்தால் தவறு ஏற்படுமே. ஆகையால்தான், அவரைச் சிறை செய்தேன்."

"இருந்தாலும் அவர் உன்னைவிடப் பெரியவர்; எல்லாம் தெரிந்தவர். அவரை இகழ்ந்து தலையில் குட்டிச் சிறைப்படுத்தியது அழகல்ல. அவரை விடுதலை செய்."

"தங்கள் ஆணைப்படியே நடக்கிறேன் தந்தையே."

இவ்வாறு நிகழ்ந்த பெரிய வாதத்திற்குப் பின்னரே

பிரமன் விடுதலை அடைந்தான். தன்நிலை குறித்து அவன் மிகவும் வெட்கினன். பின்னர் சிவபெருமான் முருகனைப் பார்த்து,

“முருகா! பிரமனுக்குப் பிரணவப்பொருள் தெரியவில்லை என்று தண்டனை கொடுத்துவிட்டாயே. ஓம் என்னும் மூலப் பொருளை நீ அறிவாயா? அச்சொல்லின் பொருளை எனக்குச் சொல்ல முடியுமா?” என்று, தன் துடையின் மீது முருகன் அமருமாறு செய்து, கேட்டருளினர். முருகன் ‘அது மறை மொழியல்லவா’? என்று விடையிறுக்க, இறைவன் தன் செவியை நல்க, முருகப்பெருமான் “குமலை என்னும் ஒன்றெருபதத்தின் உண்மை உரைத்தனன்” அப்பொழுதுமுதல் குருநாதன், தகப்பன்சுவாமி என்னும் பெயர்களைப் பெற்றுர்.

சிவனுர் மனங்குளிர உபதேச மந்த்ரமிகு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா!
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின்
செயலே விரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவலைந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான தும்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே,

ஓம்ஓம்ஓ மென்னும் பிரணவத்தின் மெய்ப்பொருளைத்
தான்று னுணரா னெனநினைந்த ஆறுமுகன்
செந்தா மரையயனைக் குட்டிச் சிறையிட்டுத்
தந்தைக்குக் கூறினனே தான்.

இவ்வாறு, தந்தைக்குபதேசம் செய்த கந்தக்கடவுள், ஒருசமயம் அகத்திய முனிவருக்கும் ஞானேபதேசம் செய் தருளினுராம். அதுபோன்றே எனக்கும் அருள் புரிவாயாக என்று வேண்டுகிருர் அருணகிரிநாதர்.

காலனிடத் தணுகாதே - காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞானத் – தேனமுதைத் தருவாயே!
மாலயனுக் கரியானே – மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே – நாககிரிப் பெருமாளே!

ஞானத்தை வாரிவாரி எல்லோருக்கும் வழங்குகின்ற ஞானப்பழமாகிய முருகன்-அழகன்-அறிவுப்பசி போக்கும் ஞானப்பழம் உடையவனுயிருந்தும், வயிற்றுப்பசி போக்கும்

ஒரு மாம்பழத்தின் மீது ஆசைப்பட்ட நிகழ்ச்சியையும் இப்பொழுது சொல்லவேண்டியிருக்கிறது.

ஐந்தாவது வயதிலேயே ஞானத்தை உபதேசித்த ஞான பண்டித சுவாமியாகிய முருகப்பெருமான்-அந்த இளமைப் பருவத்திலேயே உலக வாழ்க்கையை வெறுத்து துறவுக் கோலம் மேற்கொண்டு ஞானியாக விளங்கினுன்.

ஒருசமயம் நாரத முனிவர் ஒருமாங்கனியைப் பிரம்ம லோகத்திலிருந்தும் பெற்றுக்கொண்டு வந்தார். அப்பழத்தைச் சிவபெருமானிடம் கொடுத்து வணங்கி நின்றுர். அதனை அடையவேண்டும் என்று விநாயகனும் முருகனும் விரும்பினுர்கள். இருவரும் முழுப்பழமும் தமக்கே வேண்டும் என்றும் முறையிட்டார்கள். எனவே, ஒருபந்தயம் வைப்போம் என்று சிவபிரான் முடிவுசெய்தார். அதனுல், ''யாவர் உலகை ஒருநொடியில் வலமாகவந்து சேருகிறுர்களோ, அவர்களுக்கு இப்பழம் உரிமையாகும்'' என்று கூறினுர். அம்மொழிகேட்ட முருகக்கடவுள் உடனே தோகைமயில் மேல் ஏறிப் பறந்து உலகத்தை வலம் வரலானுர். ஆனுல், விநாயகப்பெருமானே, தம் தாய்தந்தையராகிய அம்மை அப்பரை—மங்கைபங்கரை—வலமாகவந்து வணங்கி 'எல்லா உலகமும் ஆனுய் நீயே'—என்று கூறி நின்றுர். அதனுல் மகிழ்ந்த இறைவர் அம்மாங்கனியைக் கணபதியின் கையில் கொடுத்துவிட்டார். கனியைப் பெற்ற ஆனைமுகன் அதை உண்ணலானுர்.

அதே சமயத்தில் ஏழு உலகங்களையும் கணப்பொழுதில் வலமாகச் சுற்றிவந்த இறைவன் முருகனும் அங்கே வந்து சேர்ந்தான். மாம்பழம் தன் சகோதரன் விநாயகனின் கரத்திலிருப்பதைக் கண்டு வருத்தமும் வேதனையும் சினமும் கொண்டான். தாயும் தந்தையும் எவ்வளவோ ஆறுதல் கூறியும் மனம் மாறவில்லை. ஊரைவெறுத்து உற்றுரைத் துறந்து பெற்றோரை வெறுத்துக் கோவணத்துடன் வெளியேறினுர். அப்பொழுது,

ஈச னுருகி மடியினில் வைத்தென்று
மினையோய் அறிவுடையை
தேசு தருநம் வாணுதற்கண் மணிநீ
சிறுவனே? பெரியை

வாச நறுமென் கனியுமொரு கனியோ
மதுரமொழி வாயால்
பேச ரியமறை ஞானப்பிள் ளைப்பழம்
நீயெனப் புகன்றார்.

இச்செயலையே,

''மயிலேறி யன்று நொடிபோதி லண்டம்
வலமாக வந்த குமரேசா''

என்றுபாடினார் அருணகிரியார்.

இவ்வாறு, ஞானப்பழமாய இறைவன் முருகன் பெருமையை எளியவன் சிற்றறிவுக் கெட்டிய வரையில் அறிவு மாற்றலு மிறையன்பும் மிக்குப் பாடுக நம்மைச் சந்தச் செந் தமிழா லென்று அருணகிரியார்க்குத் தூண்டியது போலவே என்னையும் ஊக்குவித்த இறையின் திருவருளுக்கும் உங்கட்கும், நன்றியும் வணக்கமும் கூறிக்கொண்டு முடித்துக்கொள் ளுகின்றேன்.

கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்ப ரமதாம்
எந்தைநம என்றுமிளை யோய்நம குமரா நமஎன்று தொழுவோம்,

பாடிப்பணிவோம்!

திரு. ஸ்ரீராமகதாரத்னம் V. தியாகராஜன்,
புதுக்கோட்டை.

அருணகிரிப் பெருமான் தேவருலகம் சென்று பாரி ஜாத மலர் கொண்டு வருவதற்காக ஒரு கிளியுருவெடுத்துச் சென்றார். அட்டமாசித்திபெற்ற அவர் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்ற பரகாயப் பிரவேசமெனும் வித்தையால், இறந்து கிடந்த கிளியொன்றின் உடலில் தனது உயிரைச் செலுத்த, கிளி உயிர் பெற்றது. அக்கிளியுருவில் பாரிசாத மலரெடுத்துத் திரும்புவதற்குள், அருணகிரியாரின் எதிரியான ஒருவன் அவரது உடலை அழித்துவிடவே, கிளியுருவிலேயே அவர் திருச்செங்கோடு சென்று பின்னர் திருவண்ணாமலை சென்று கந்தரனுபூதி யெனும் மந்திர நூலைப் பாடியதாகப் பெரியோர் கூறுவர். 51 அனுபூதிப்பாடல்களில் நாகாசல மென்ற திருச்செங்கோடு மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு எந்தத் தலத்தின் பெயரும் குறிப்பிடப்படவில்லை.

சைவத்திற்கு ஒரு கிளி, அருணகிரி, வைணவத்திற்கு ஒரு கிளி சுகப்பிரமம். கிளி கொத்திய பழம் மிகவும் விசேட மானது. பாகவதம் என்றகனி சுகப்பிரமம் என்ற கிளி கொத்தியது என்றும் அனுபூதிக்கனியை அருணகிரிக் கிளி கொத்தியது என்பர். இறைவனை "கனி" என்பர் அப்பர். "கற்றவர் விழுங்கும் கனி" என்பார் சேந்தனார். "விழுங்கிய" என்றால் கனி தீர்ந்து விட்டது என்றும் "விழுங்கப்போகும்" என்றால் இன்னும் விழுங்காதது என்றும் பொருள்படும். "விழுங்கிய" என்ற சொல் நுகர்ந்துகொண்டே யிருப்பினும் குறையாத "அள்ள அள்ளக் குறையாத" அமுதம் ஆண் டவன் என்று குறிப்பது போலும்!

* * *

ஞானக்கனியான முருகன் மீதில் ஞானியாகிய அருண கிரியார் பாடியது கந்தரனுபூதி. கந்தன் என்பது உலகுள்ள

வருக்குப் பற்றுக் கோடாக இருப்பவன் என்பது. கந்தன் என்பதற்கு ஒன்று சேர்ந்தவன் என்றும் ஒன்ருகச் சேர்ப் பவன் என்றும் பொருள் கூறுவார். சரவணப் பொய்கை யில் ஆறு குழந்தைகளாக விளங்கி, கார்த்திகைப் பெண்கள் அறுவரிடம் பாலுண்டுவளர்ந்த பெருமானை உலகமாதாவான பார்வதி வந்து ஒன்ருக எடுத்தாள். உடனே ஆறுமுகங் களுடனும் பன்னிருத் திருக்கரங்களுடனும் இறைவனுன முருகன் ஒரே குழந்தையாக மாறினுன். அப்பெருமானுக்கு ''கந்தன்'' எனப்பெயர் சூட்டப்பட்டது.

தாயென ஆரல் போந்து தனங்கொள் பால் அருந்தலாலே
ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல்பேர் பெற்ருன்;
சேயவன் வடிவமாறும் திரட்டி நீ யொன்ருச் செய்தாய்
ஆயதனலே கந்தனுமெனு நாமம் பெற்ருன்.

என்று சிவபெருமான் பார்வதியிடம் கூறியதாக கந்தபுராணம் கூறுகின்றது. இப்பேர்ப்பட்ட கந்தப்பெருமானை வணங்கி அவனது அருள்பெற்று விளங்கும் ஆனந்த நிலையையே அனு பூதி என்பர். அனுபூதியான ஆனந்தத்தை நாம் அடைய வேணுமென்ற கருணை நோக்கத்துடனேயே அருணகிரி நாதர் இந்நூலைப்பாடினுர்.

கந்த ரநுபூதி பெற்றுக் கந்தரநு பூதி சொற்ற
எந்தையருள் நாடியிருக்கும் நாள் எந்நாளோ?

என்பார் தாயுமானவர்.

* * *

கந்தரநுபூதி ஒரு மந்திர நூல் என்பர். மந்திரம் எதை ஆரம்பித்தாலும் ''ஓம்'' என்ற எழுத்தில் ஆரம்பிப்பார்.

''தூமறை கட்கெல்லாம் ஆதியும் அந்தமுஞ் சொல்லும்
ஓமெனப்படும் ஓரெழுத்து''

என்பார் கந்தபுராணமுடையார். ஓம் என்ற எழுத்து அ, உ, ம் என்ற மூவெழுத்துக்களின் சேர்க்கை என்பர். நடு வெழுத்தான ''உ'' என்ற எழுத்தில்தான் தமிழிலக்கிய பக்தி மான்கள் தமது நூல்களைத் தொடங்கினர். ''உலகெலாம்'' எனப்பெரிய புராணம் பாடிய சேக்கிழாரும் ''உலகம் யாவை யும்'' எனக்கம்பரும், ''உலகம் உவப்ப'' என நக்கீரர் (திரு

முருகாற்றுப் படையையும்) ஆரம்பித்துள்ளது கண் கூடு. வேதத்தை நிகர்த்த தேவாரம் பாடியவரில் முதல்வரான திரு ஞான சம்பந்தர் "ஓம்" என்றோ "உ" என்றோ தொடங்காமல் "தோடுடைய" என்ற சொல்லில் ஆரம்பிக்கிறார். அவர் பாடுவது தமிழ் வேதம். முதலெழுத்தான "த" என்பதின் ஒற்றான "த்" என்ற எழுத்தில் ஓங்காரத்தைச் சேர்த்து "தோ" என்று தேவாரம் தொடங்கினார் என அருமையான பொருள் காட்டி விளக்குகிறார் வாகீச கலாநிதியாகிய திரு. கி. வா. ஜகன்னாதன்.

இவ்வாறிருக்க அருணகிரி தனக்கெனப் புதிய முறையிலே "ஆடும்" என்ற சொல்லில் மந்திர நூலாகிய கந்தரனுபூதியைத் தொடங்குகிறார். ஆ என்பதில் அகரமும் டு என்பதில் உகரமும் "ம்" என்பதில் மகரமும் வர "ஓம்" என்றே தொடங்குகிறோம். மேலும் ஆடும் பரி என்று மயிலைக் குறிப்பிடுவதன் மூலம், சாதாரண மயில் அல்ல, ஆடும் மயில். தோகையை விரிக்கும் போது "ஓம்" என்ற பிரணவ எழுத்தை ஞாபகமூட்டும் நயம் அறிந்து இன்புறத்தக்கது.

இறைவனே! உனது மயில், வேல், சேவல் இவற்றைப் பாட அருள்வாயாக எனத்தொடங்குகிறது அநுபூதி நூல்.

மயிலையும் வேலையும் சேவலையும் பாடவரங்கேட்கிறார் அருணகிரியார். மயில் ஓங்காரவடிவம் காட்டுகின்றது. வேல் என்பது முருகனே என்று கூடக் கூறலாம். முருகனடியார் பலர் வேலுக்கே முருகனது பெயர்கள் நிறைந்த மந்திரங்கள் கூறிப் பூஜை செய்வதைக் காண்கிறோம். முருகன் ஒளியுருவானவன். "தீபமங்கள ஜோதி" என அப்பெருமானை அழைக்கிறது திருப்புகழ். வேலும் ஒளிமயமானது. மின்னும் சுடர் வேல் என்பர் அருணகிரி. முருகனுக்கு ஆறுமுகங்கள். வேலுக்கு ஆறுபட்டைகள். முருகன் சக்திவேலன். அவன் கையிலிருப்பது சக்திவேல். எனவே வேலையே முருகனாக எண்ணி வீரவாகுதேவர் வணங்கியதாகக் கூறுகிறது கந்த புராணம்.

அந்தமில் ஒளியின்சீரால் : அறுமுகம் படைத்தபண்பால்
எந்தைகண் ணின்றும்வந்த இயற்கையால் : சத்தியாம்பேர்

தந்திடும் பனுவல்பெற்ற தன்மையாற் தனிவேற்பெம்மான்
கந்தனே என்னநின்னைக் கண்டுளக்கவலை நீத்தேம்.

—(கந்தபுராணம்–4-6–212)

மயில் ஓங்கார உருவம் காட்டுகின்றது, வேல்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
தொளைத்தவேல் உண்டே துணை.

என்று முருகனது பிரதிநிதியாகநின்று அன்பர்க்குத் துணைபுரிகிறது, ஆடும்பரிவேல் இரண்டுமே அணிசேவல்=அழகிய துணை. இதையே பாடும் பணியாக அருள்வாய். அதாவது ''வேலுமயிலும் துணை'' என்றுபாட அருள்வாய் என்றும் பொருள்கூறுவர்.

அணிசேவல் எனக்கொடியில் விளங்கும் சேவலைப் புகழ்வதாகவும் கூறுவர். மயில் ஓங்கார உருவம்காட்ட, சேவல் ''ஓம்'' என்று குரல்கொடுத்துக் கூவும் என்பார். ஓம் என்ற சொல் நமது ஆணவம், கன்மம், மாயைகளாகிய மும்மலங்களையும் அழிக்கும் என்பர். என் ஆணவம் அழியக்கூவி, முருகனை வரவழைப்பாய் என்று ஒருபாடல் உண்டு.

வந்திப்பேன்: அனுதினமும் வாழ்த்துவேன்: உனதுதிருவடியைநாளும்
சிந்திப்பேன் முப்பொழுதும் சேவிப்பேன்: செஞ்சூட்டுச்சேவலே! கேள்!
பந்திப்பேன் எனதுவலிபாரேனும் ஆணவமாம் பகைவிண்டோட
கொந்திற்றேன் பொழிசாரற் தணிகைவரையான் வரக்கூவாயே.

இவ்வாறு வேலையும் மயிலையும் சேவலையும் வணங்குவதே தனது வேலையாயிருக்க வரம் கேட்கின்றார் அருணகிரிநாதர். மாணிக்கவாசகர்

பாடவேண்டு நான்போற்றி நின்னையே பாடிநைந்துருகி
    நெக்கு நெக்கு
ஆடவேண்டும்

என்றும்

பாடிற்றிலேன் பணியேன்

என்றும் உருகுவார். ''உன்னைப்பாடிப் பணிந்து உன்தொண்டரின் தொண்டனுகிப் பாவங்களை அழித்து உனதுதிருவடியில் மலரிட்டு வழிபடும் பேறு பெறவில்லையே.

பணிகின்றேனிலை! நாத்தழும்பு நினைப்பல கவியாற்பாடத்
துணிகின்றேனிலை! தீவினை துலக்க நின்தொண்டரில் தொண்டாகத்
தணிகின்றேனிலை! உள்ளநெக்குருகி புன்நாள்களில் நறும்பூக்கொண்
டணிகின்றேனிலை! எங்ஙனமுய்வேன்! அரதனபு ரத்தனே!

என்பர் திரிசிரபுரம் மகாவித்துவான் பிள்ளையவர்கள்.

கஜாமுகாசுரனைக் கொன்றவனை யானைமுகத்தவனின் தம்பியே! என முருகனை விளிக்கிறார் அருணகிரி. முருகனுக்கும் யானைக்கும் சம்பந்தம் நிறையவுண்டு. முருகனின் தந்தையின் உடம்பில் யானைத்தோல். தாயைப்பெண்யானை போன்றவள் (பிடியதன் உரு) என்பர். முருகனின் அண்ணன் யானைமுகத்தவன்,மனைவியோ தெய்வயானை. முருகனையும் இளைய களிறு என்பர்.

விநாயகனுக்குத் தம்பியைப்பற்றிப் பேசினால் மிகமிகக் களிப்பு. அதனாலேயே அனுபூதிக் காப்புச் செய்யுளிலேயே "தஞ்சமென்றவரைத் தாங்கியருளும் தருமமூர்த்தி" என்ற அருணகிரிநாதர், தமையனைப்பற்றிப் பேசினால் தம்பி முருகனுக்கும் தாங்கமுடியாத களிப்பு ஏற்படும் என்று கண்டு கொண்டார். தம்பிக்குக் கல்யாணம் செய்துவைத்த தமயனரல்லவா விநாயகப்பெருமான்! எனவே முருகனின் காது குளிர அவரை யானை சகோதரனே! என அழைத்து மயில், வேல், சேவலைப்பாட அருள்புரியுமாறு வேண்டுகிறார் அருணகிரிநாதர்!

ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமாமுகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

— வேலுமயிலும் துணை —

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

(மலர் 19. இதழ் 2-ன் தொடர்ச்சி)

IV

MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

89. செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத
 மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரி
 யேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங்
 கேட்டிருந்தும்
பொய்ய னேனு னுண்டுடுத்திங் கிருப்ப தானேன்
 போரேறே.

89 The meanest cur am I; I know not how to do the
 right;
'Twere but what I deserve, should'st Thou my
 wickedness requite
With the dread fate of those who never saw Thy
 flowery feet;
For though mine eyes have seen, my ears have
 heard saints guileless, meet,
Who reached Thy fragrant presence, yet I stay, for
 false am I,
Fit for naught save to eat and dress, Lion of
 victory.

(To be continued)

Dr. Zakir Saheb

"Dr. Zakir Husain is truthful in a rich and spiritual sense."
—Rajaji

DR. Thiru. R. R. DIWAKAR

EDUCATION should be the basic instrument of National Purpose, can well be the keynote of Dr. Zakir Saheb's life as a teacher and an educationist.

Judged by any standard, the Presidents of the Republic of India have been great men. They have always added dignity and grace to the high office. Dr. Zakir Husain Saheb, never an aspirant for power or position, has shown within a few months how easily he can continue the tradition.

If any one asks me today, tomorrow, and the day after as to what is the password for humanity, I would say "Co-existence" for ever. Humanity would perish if it fails to adopt this password consciously, deliberately and now more vigorously than ever. That wonder-word includes ahimsa, love, friendliness, co-operation and everything that is required for civilized social living. It has been the watchword of India and perhaps that is the secret of her continuity, her vitality and her creativity. Assuming that Aryans were foreigners, there is no ethnic or racial problem today in India. Our culture and way of life can be described either as Aryo-Dravidian or Dravido-Aryan. Even Vedic gods have yielded place without fuss to cloud-coloured (Shyama) Rama and Krishna, and to Shiva in a symbolic form. Perhaps the inner extremely catholic spirit—not the passing forms and rituals—of

On Feb. 8 Dr. Zakir Husain completes 71 years.-Ed.

the Sanatana Dharma in its assimilative and accommodative process may, in the long run, be the answer to all the intolerance, exclusiveness and fanaticism which many times grips the minds of men of different races, religions and nations.

Strange to say, when I was in USA I was asked by a highly learned Unitarian as to whether Christ was being looked upon as a Hindu God. I had no such information; but on pondering over the question, I said, if Buddha, a rebel against some of the then existing forms of what is now called Hinduism could be later accommodated as an Avatar, an incarnation of God, it would be no wonder if Christ is given with deep reverence a place alongside! I added however, that there was no such conscious attempt I knew of. Multitudinous variety with basic and binding unity seems to be the very pattern of nature and of life. India has always tried to perceive and present a picture of unity in diversity and diversity in unity.

It is very difficult, nay, impossible to condense into one word or a few words what one feels when one meets Dr. Zakir Saheb and as a flash-back one peeps into the story of his long and intensely dedicated life. And yet one can see throughout his strenuous and noble life of struggle, service and sacrifice the one refrain of a heroic attempt, in this country of varied peoples, at educating them, to raise their level of culture and make them conscious of the responsibilities of real Indian Citizenship. What can be the hall-mark of a citizen of India, an ancient country with a variety of religions and languages, with different sects and creeds but 'cultured co-existence'—co-existence of a cultured people?

Many a time a feeling does come up. 'how can you protect humanity in a world of wild animals', when one sees mischief-making madness all round on petty questions of formal religion, link language, and so on. It requires bravery and insight to give a call of unity and toil to the youth of this country as Dr. Zakir Saheb did in one of his famous addresses. After describing the many, many ills the country is suffering from, he said, '.......In short it is a cursed country; but after all it is our country. We have to live in it and die in it. That is why this country will be the trial of your courage, the challenge to your abilities and the test of your love..........I believe that destruction will not ease our work. Destruction is already there in abundance..........the country needs not the spurt of your blood, but the steady flow of your perspiration. It needs work, hard and silent work'.

How true this refrain rings even today at this moment? It is all the more powerful in the light of Dr. Zakir Saheb's own tireless toil in the cause of education right from the days of his student-life. It is said that he made only one decision and that was in 1920 to non-cooperate with the British government-controlled educational institution at Aligarh. The call to fight for freedom came from Gandhiji and the ever-militant Ali Brothers. The seeds of a heroic saga in the form of the Jamia were sown. The growth of the rebel student into a mature educationist of the highest order can be traced along with the changing fortunes of that great national institution Jamia Millia, which is the greatest attempt to blend Islamic concepts with Indian nationalism.

The great Turkish publicist Hailde Edib describing the aims of the Institution in 1935 said, 'The

Institution has two purposes, First to train the Muslim youth with definite ideas of their rights and duties as Indian citizens. Second, to coordinate Islamic thought and behaviour with Hindu............it is nearer to the Gandhian movement than any other Islamic Institution I have come across.'

The trials and tribulations Dr. Zakir Saheb and his two great colleagues Dr. Mujeeb and Abid Husain Saheb went through in building up the Institution are simply thrilling. Severe tests also came in the form of temptations to leave the path of Nationalism and Gandhi in order to finance Jamia. But instead, many of its teachers went to jail during the freedom struggle! Sri G. Ramachandran was one of the teachers in that Institution and Devadas Gandhi was a student there. Gandhiji stood by the Institution to the last.

Out of the crucible of suffering and hard work in and for the Jamia, out of the sustained effort to qualify himself as a good and inspiring teacher, by his devotion to the basic principles of Nai Talim of Gandhiji and above all, by the patriotic spirit of national service with which he was suffused, Dr. Zakir Saheb has risen to the highest honour India can bestow on her children. Though some controversy befogged the election, Dr. Zakir Saheb in a few months has proved how futile it was to waste energies like that. The dignity and grace he has brought to bear on the office, the brief but highly significant utterances which come from him on a variety of occasions, the sweetness and courtesy which always move with him, have endeared him to all, high and low, rich and poor. Like his predecessor, Dr. Zakir Saheb has proved that a good teacher with intellectual brilliance, warmth of heart

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

பெருமையும் சிறுமையும்

வித்துவான் திரு. கோ. கோவிந்தசாமி அவர்கள்,
தமிழாசிரியர்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி
சென்னை-1

மாந்தர் தம் வாழ்க்கையில் ஆற்றும் செயல்கள் பல. அச்செயல்கள் நற்செயல்களாக, ஒழுக்கத்தினின்று சிறிதும் பிறழாதனவாக இருப்பின் அதனால் பெருமையும், இல்லையேல் சிறுமையும் விளைகின்றன. தம்செயல்கள் மூலம் ஏற்படும் நன்மைதீமைக்கும், பெருமைசிறுமைக்கும் அவரவரே காரண மாவர். அதனால்தான் வள்ளுவர் பெருந்தகையும்,

> ''பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக்கல்''

என வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பெருமையும் சிறுமையும் பிறரால் வருவன அல்ல. தம் மால் வரக்கூடியவை. தாம் நற்செயல்களை ஆற்றின் அதனால் பெருமையும் தீச்செயல் புரியின் சிறுமையும் ஏற்படுகின்றன. ''பெருமையும் சிறுமையும் தான்தர வருமே'' என்பது ஆன் றோர் மொழி.

நன்னிலைக்கண் தன்னை நிறுத்துபவனும், தன்நிலையி னின்று இழிவான நிலைக்குச் செல்பவனும், தன்நிலையிலிருந்து

(முன்பக்கத் தொடர்ச்சி)

and depth of feeling can as well be a teacher of humanity—can grace a gadi as well as win a place in the hearts of men.

May Dr. Zakir Husain Saheb live for a hundred years and more!

The above article is reproduced with the kind permission of the Editor of 'Bhavan's Journal'.

மேன்மேலும் உயர்ந்து கொண்டே செல்பவனும், தன்னை மாந்தரிற் சிறந்தவனுகச் செய்பவனும் தானேதான் என்பதை,

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் — நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னை
தலையாகச் செய்வானும் தான்

என நவில்கிறது நாலடியார்.

பெருமைக் குணமாவது யாது? தமக்கு எத்தகைய நிலை ஏற்படினும் மனங்கலங்காது, ஆற்றவேண்டிய அறநெறிகளைத் தடையின்றிச் செய்து, தம் உயர்வை நிலைநிறுத்தும் உறுதிப்பாட்டிற்கே பெருமை எனப்படும். இப்பெருமைதான் ஒருவனுக்கு மிக்க புகழையும், தாம் தம் வாழ்வில் நற்செயல்களைப் புரிந்துள்ளோம் என்ற மனநிறைவையும் அளிப்பதாகும்.

செயற்கரிய செயலைச் செய்யமுடியாத சிறியோர் உயர்ந்த நிலையிலிருப்பினும் அவர் மேன்மையானவர் அல்லர். அவற்றைச் செய்து உயர்ந்தவர் தாழ்ந்த நிலையிலிருப்பினும் அவர் கீழானவரல்லர்.

மன உறுதியுடன் சிறிதும் தம் ஒழுக்கத்தினின்று வழுவாத பண்புடைய மகளிர் தம் கற்பையும் காத்துக்கொண்டு நடப்பதுபோல பெருமைக்குணமானது தன்னைத்தான் காத்துக்கொண்டு ஒழுகுவார்க்கு உண்டாகும்.

புலியேறு பசித்ததாயினும் பயிரைத்தின்னுது. அதுபோன்று பெருமையை உடையவர் வறுமை நிலையை எய்தியபோதும் சிறுமைச் செயல்களைச் செய்ய ஒருப்படார்.

நல்லா றொழுக்கின் றலைநின்ருர் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் — பல்பொறிய
செங்கட் புலியேறறப் பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்

— என்பது குமரகுருபர சுவாமிகள் அருளிய அருள் வாக்காகும்.

சான்ருேர் தமக்குப் பெருமை உண்டானபோதிலும் அதற்காகச் செருக்கடையாது பணிந்து நடப்பர். சிறுமை

யுடையவர்களோ தம்மைத்தாமே வியந்து பாராட்டிக் கொள்வர்.

''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து''

தமக்கு எத்தகைய சிறப்பு ஏற்படினும் செருக்கு இல்லா திருத்தலே பெருமையாகும். சிறுமைக்குணமாவது செருக்கின் எல்லைக்கே சென்று நிற்பதாகும்.

நற்பண்புகளை அணியாகக் கொண்ட பெருமை மிக்க சான்றோர் பிறர் மானத்தைக்கூறி அவமானத்தை மறைப்பர். சிறுமதியாளரோ பிறரின் குணத்தை மறைத்து குற்றத்தையே எடுத்தியம்புவர்.

''அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறிவிடும்''

சிறுமைக் குணமுடையோர் தம் நண்பர்கட்கும் தீங்கிழைக்கும் பண்புடையவர்கள். அறிவுடையவரோ பகைமையைப் பொறுக்கும் பண்பினர். ஆதலால் சான்றோர் கேண்மை பெருமையைத்தரும்.

''இசைந்த சிறுமை இயல்பிலாதார்கண்
பசைந்த துணையும் பரிவாம் — அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவினார்கண்
பகையேயும் பாடுபெறும்''

எனக் கூறுகிறது நாலடியார்.

ஆற்றில் நீர்வற்றி மணற் சுடுங்காலத்திலும் ஊற்று நீரானது மக்களை வாழ்விக்கும். அதேபோல் சான்றோர் வறுமையுறினும் தம்மால் இயன்ற அளவு பிறர்க்கு நன்மை செய்ய முயல்வர். இஃது பெருமைக்குரிய சான்றோரின் பண்பாகும். சிறுமைக் குணமுடையோர் தாம் வறுமையுற்ற காலத்திலும் பிறர்க்கு உதவுதல் அரிதாகும். ஞாலத்தில் வாழும் மாந்தர் சிறுமைக்குணமுடையோராய்ப் பல ... ... ஆண்டுகள் வாழ்வதினும் நல்லோரிணக்கத்தைப்பெற்று, நல்லொழுக்கத்துடன் பிறர் நலனைத் தன்னலனாகக் கொண்டு, நற்பண்புகளுடன் சில ஆண்டுகள் வாழின் அது சிறந்ததாகும். பெருமையைத் தருவதாகும்.

சிறுமையின்றிப் பெருமையோடு வாழும் வாழ்வே சிறந்ததாகும்.

நா காக்க!

புலவர். திரு. திருமேனி. நாகராசன் அவர்கள்,

தமிழாசிரியர்

6. மடத்து வீதி, காரைக்கால்.

உலகில் பிறந்த மாந்தன் சிறப்பான வாழ்வு நடாத்த மனம், மொழி. பொறிகளைத் தீநெறிக்கண் செல்லவொட்டாமல் தடுக்க வேண்டும். மனங் காக்கப்பட்டால் அதன் வழி மொழியும், மொழி காக்கப்பட்டால் அதன்வழி செயலும் வாரா. எனவே மொழிக்கும் செயலுக்கும் முதற் காரணம் மனமே. அம்மனம் காக்கப்படின் பின்னவை இரண்டும் காக்கப்பட்டன போலாம்.

அடக்கம் ஒருவனுக்கு நன்மையை உண்டுபண்ணுகிறது; அது அவனைத் தேவர் உலகிற்கும் கொண்டு போய் உய்க்கிறது; அவனுக்கு அதனைவிட உறுதிப்பொருள் பிறிது இல்லை. அடக்கமுடையவன் உயர்ந்தோரான் அறியப்பட்டுச் சிறப்புச் செய்யப்படுகின்றான்; எழுமையும் தனக்கு அரண் அமைத்துக் கொள்கிறான்; மலையினும் மாணப் பெரியவன் ஆகிறான்.

அடக்கத்துள் மிக்கது மனவடக்கமே. ஏனெனில், அஃதொன்றே ஏனைய இரு அடக்கங்கட்கும் நிலைக் களனாயும் காரணமாயும் விளங்கவல்லது. ஆயினும், இங்குச் சிறப்புக் கருதி நாவடக்கமே எடுத்தாளப் பெறுகிறதென்க. நாவடக்கமாவது நாவினை அடக்குதலாம். அஃதாவது தீயசொற்களும், வழுவின சொற்களும், பயனில் சொற்களும் கூறுதொழிதலாம். நாவடக்கம் மிக்கவர்க்கு நல்குரவு இல்லை; இனிய நட்பும் சுற்றமும் அவரைச் சுற்றி நிற்கும்.

நாவடக்கத்தில் சிறந்தார் பலராம். அவருள் ஈண்டு எடுத்து உரைக்கப்பெறும் சால்பினன் மாவளத்தான் என்பான். இவனே புலவர் போற்றும் புரவலன் நலங்கிள்ளி

தம்பி யாவான். மாவளத்தான் ஒருகால் தாமப்பல் கண்ணன் என்ற புலவரோடு வட்டாடிக்கொண்டிருந்தான். ஆட்டத்தின் இடையில் புலவர் தம் தோல்விக்கு அஞ்சிச் சூதாடு கருவியை மறைக்கலாயினர். அதுகண்ட மாவளத்தான் புலவர் மீது வட்டுக்கொண்டு எறிந்தான். புலவர் உடன் மிகவே சினந்து சொல்லாத சொல்லைச் சொன்னுர். அஃது இது:— "நீ சோழன் மகன் அல்லை". புலவர் மொழிகேட்ட புரவலன் தம்பி தலைகுனிந்தான்; உடல் குறுகினுன்; மாவளத்தான் வாய் திறக்கவே இல்லை; அவன் நா நவிலவே இல்லை. அவ்விடத்து அவன் கொண்ட நாவடக்கந்தான் என்னே! இடம், காலம் அறிந்து அவன் தன் நாவைக்காத்த திறம்பெரிதே அம்ம! ஈண்டு உறுதியாய் ஒன்று உரைக்கவேண்டும். யாதனில், அவன் அங்கு நாவைக் காவாது போயின் தாமப்பல் கண்ணனுர், நலங்கிள்ளி, மாவளத்தான் ஆகிய மூவர் வரலாறும் வேருய் முடிந்திருக்கும். இதனை நுண்ணறிவினேர் உய்த்துணர்ந்து கொள்வாராக.

மாவளத்தானைக் கடுஞ்சொல் சொல்லிய தாமப்பல் கண்ணனுர் தம் தவறுணர்ந்து அவனைச் சாலவும் போற்றுகிருர். நாகாத்த மாவளத்தான் இன்றும் இசையின் மிசையில் இருக்கின்ருன் என்பது ஒப்புக் கோள். அவனைப்போற்றிப் பாடிப் புலவர் தம் புலமைக்குப் புறம்பாய்ப் புகன்ற புன்மொழிக்கு உய்வு தேடிக்கொண்டார். அவர் பாடல் வருமாறு:—

* "நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக!
நேரார்க் கடந்த முரண்மிகு திருவின்
தேர்வண் கிள்ளி தம்பி! வார்கோல்
கொடுமர மறவர் பெரும! கடுமான்
கைவண் தோன்றல்! ஐயம் உடையேன்!

* புறநானூறு ; பாடலெண் : 43

ஆர்புனே தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய்; என்னினும்
நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே!
தம்மைப் பிழைத்தோர்ப் பொறிக்குஞ் செம்மல்!
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்ப; காட்டினை ஆகலின்
யானே பிழைத்தனென்; சிறக்கநின் ஆயுள்
மிக்கவரும் இன்னீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே!"

நாவினை அடக்கியவர் உயர்வு பெறுவர் எனவே அதனை அடக்காதவர் தாழ்வுபெறுவர் என்பது பெற்றும். நாவினை அடக்காமல் நலிந்தமைக்கு நல்ல சான்றுவார் கனக விசய ரென்னும் வடவார்ய மன்னராவார். "நண்டு கொழுத்தால் பொந்துள் இராது" என்னும் நாட்டுப் பொருண் மொழிக் கேற்ப, வடநாட்டில் நிகழ்ந்த மண நிகழ்ச்சியில் கூடிய கனக விசயர் அடங்காராய்த்தம் ஊத்தை வாய் திறந்தனர். அவ் விருவரும் நாவடக்கத்தின் மேன்மையை உணர்ந்திலர். அவர் "முன்பு தமிழ் மன்னர் ஈண்டு பொருத போது எம்போலும் மறமன்னர் ஈண்டில்லை போலும்" எனத் தம் நாவான் நவின் றனர்.

கனகவிசயர் கூற்றைச் செவியுற்றான் சேரன் செங்குட்டு வன். புல்லியர் கூற்றுப் புரவலனுக்கு மிக்க சினத்தைக் கொடுத்தது. அவன் நெஞ்சம் விம்மக் கண்கள் சிவந்தன. உடன் அவன் ஆர்த்தெழுந்து,

§ "பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவில் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனச்
சீற்றங் கொண்டு இச்சேனை செல்வது"

எனப் புகன்று வடபுலம் நோக்கிப் படைபலம் திரட்டிப் போயினன். தமிழ்ப்படைமுன் ஆரியப்படை தலைதடுமாறி

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

§ சிலப்பதிகாரம்,

"அருளும் பொருளும்"

திரு. எ. மாணிக்கம் அவர்கள்,
''முருக நிலயம்''
விசூர், மானம்பதி (அஞ்சல்) (வழி) உத்தரமேரூர்,
செங்கை மாவட்டம்.

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.'' என்பது நமது திருவள்ளுவரின் தெய்வீக வாக்கு. ஆனால் நம்மில் பலர் இவ்வரிய குறட்பாவில் முன்னதாகிய அருளைவிட்டு, அவ்வுலகம் என்ற ஒன்றையும் அறவே மறந்து, பின்னதாகிய பொருளைப்பற்றியும், இவ்வுலக இன்ப வாழ்வைப் பற்றியுமே சதா நினைந்து நினைந்து, நெஞ்சம் புண்ணாகி, அஞ்சி அயர்கின்றனர். இதனை,

''உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன—கண்புதைந்த

(முன்பக்கத் தொடர்ச்சி)

யது, சேரன் செங்குட்டுவனால் வேறப்பட்ட கனகவிசயர் புறந்தந்தோடினர்; ஓடிய அவரை இழுத்துச் சென்று இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் மண்ணி அவர்தம் தலைமுறிய சுமக்கவித்து ஞமலி போலும் தமிழகத்துக்கு கொடு வந்தான். அந்தோ! நாவினைக் காவாத கனகவிசயர் பட்ட பாடு சொல்லுந் தரத்ததன்று.

எனவே, அமரருள் உய்க்கும் அடக்கத்தைக் கைக்கொளல் வேண்டும். அடக்கவேண்டுவனவற்றுள் நாவை அவசியம் அடக்குதல் வேண்டும். நாவடக்கம் உண்மையால் மாவளத்தான் புகழுற்றதும், அஃதின்மையால் கனகவிசயர் இகழுற்றதும் வெள்ளிடைமலை. ஆதலின், மாந்தப்பிறவியின் பயனும் புகழ்வேண்டின் அடக்கம் பேணுக.

''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்,''

என நல்வழி இனிதே எடுத்துரைக்கின்றது. மேலும் நமது தகைசான்ற பொய்யா மொழியும்,

''ஒருபொழுதும் வாழ்வதறியார்; கருதுப
கோடியும் அல்ல பல.'

என்று பறைசாற்றி நிற்கிறது. இதனுல் எதையும் நினைக்க வேண்டாம் என்றோ, பொருளைத் தேட வேண்டாம் என்றோ கூறவில்லை, நாம், ''திரைகடலோடியும் திரவியந் தேடு''தல் வேண்டும். ஏனெனில் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லையல்லவா? மேலும்,

''பொருள் இல்லார்க் கின்பமில்லை புண்ணியமில்லை யென்றும்
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய தருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே.''

என்பது விவேக சிந்தாமணியின் வீரிய உரையாகும். மற்றும்,

''இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.''

என எப்பாரும் போற்றும் முப்பாலும் தப்பாது மொழி கின்றது. மேலும்,

கல்லானே யானுலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங்கு எதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்று ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது அவன்வாயிற் சொல்,

என நல்வழியும்,

''நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும்; நல்கூர்ந்தார்
சொற் பொருள் சோர்வு படும்.''

என உத்தரவேதமும் உலகோர்க்கு உண்மையை உணர்த்தக் காண்கின்றோம். மேலும் ''கொடிது கொடிது வறுமை கொடிது,'' அல்லவா ? தவிரவும், இந்த வறுமை நிலையினை நமது திருவள்ளுவர்,

''இன்மை எனவொரு பாவி ; மறுமையும்
இம்மையும் இன்றி வரும் ''

எனக் கடிந்து கூறுகின்றார். ''பசிப்பிணி என்னும் பாவி'' என மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரும், ''மிடி

யென்ருெருபாவி வெளிப்படினே'' என எந்தையாம் கந்த வேளின் அருள்பெற்று, திருப்புகழ் என்ற அமுதமழை பொழிந்து நன்றே உதவிய அருணகிரிப் பெருமானும் முறையே வறுமையினைப் பாவியென்றே கருதி அருளிப் போந் தனர். மேலும்,

> ''மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
> தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை — தேனின்
> கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
> பசிவந் திடப்பறந்து போம்.'' *(நல்வழி)*

எனவே பசிப்பிணி யென்ற பாவியின் கொடுமையினைப் போக்க பத்தும்பறவாமல் இருக்க, பணம் தேவைதான். அதற்காக அல்லும் பகலும் அறுபது நாழியும், ''பேராசை யெனும் பிணியிற் பிணிபட்டு, ஓரா வினையால் உழலத் தகுமோ''. (கந்தரநுபூதி) தகாது. தவிரவும் பொருள் சேர்ப் பதே குறிக்கோளாகக் கொண்டு எந்நெறியானாலும் அந்நெறிச் சென்று செந்நெறிகெட பொருளைச் சேர்த்தலும் தீதே யாகும். மேலும், அவ்வுலக வாழ்க்கைக்குச் செலாவணி நாணயம் அருள். இவ்வுலக வாழ்க்கைகுச் செலாவணி நாண யம் பொருள். எனவே நாணயத்தோடு, நாணயம் தேடுவது அவசியம் அல்லவா ? எதற்கும் ''நா'' நயம் மிகமிக முக்கியம். இன்றைய நாளில் வெளிவருகிற நாணயம் கனமின்றி காற் றிலே பறப்பது போல, நம்மில் பலருடைய நாணயமும் கன மின்றி காற்றிலே பறக்க ஆரம்பித்து விட்டது. ''கடன் பட் டான் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கை வேந்தன்'' என் பது போய் ''கடன் கொடுத்தான் நெஞ்சம் போல் கலங் கினன்'' எனப்பாட வேண்டியிருக்கிறது, இன்றைய பொரு ளீட்டு வோரின் நிலை. என்னே இவர்தம் மாண்பு! இத்தகைய அருளாளர்களின் குறிக்கோள் யாது தெரியுமா ? எந்த வகையோ ஒருவகை. பணம் சேர்க்க வேண்டும். செல்வந் தனுக மாற வேண்டும். அவ்வளவுதான். இதுதான் அன் னரின் அழிக்க ஒன்ணு அடிப்படைத் தத்துவம். இவ்வகை யான் ஈட்டிய பொருள் எவ்வகையானும் இன்பம் பயவாது. அதன் இறுதிநிலை துன்பமே யாகும். எனவே அல்வழி நீக்கி நல்வழியான் நாடியபொருளே நலம் பயக்கும்.

''அறன் ஈனும் இன்பமும் ஈனும்; திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.'' (குறள்)

எனவே அன்பொடும் அருளொடும் வாராப் பொருளாக்கத்தைக் கைவிடுதலே சிறந்த முறையும், அறமும் ஆகும். மேலும்,

''களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்து
ஆவது போலக் கெடும்.' (குறள்)

ஆகையினாலே குறுக்கு (தீய) வழிகளை வெறுத்து ஒதுக்கி நன் வழியிலேபொருளைச் சேர்க்க நாளும் முயற்சித்தல் வேண்டும். இப்படி நல்ல வழியில் வரும் பொருளை மிகுதியாகப் படைத்தவர்க்கு, மற்றை அறமும், இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாகிவிடும், என்பது நமது தெள்ளுதமிழ் வள்ளுவரின் திருவாய் மொழியாகும். இதோ,

''ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு, எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.'' (குறள்)

என்பதே அவர் திருவாய் மலர்ந்த தெய்வீகச் சொற்களாகும். மேலும் ''புண்ணிய வசத்தினாற் செல்வமது வர வேண்டும், பொருளை ரட்சிக்க வேண்டும்.'' எனச் செல்வம் சேர்க்கும் செவ்வையான வழியை அறப்பளீசுர சதகம் சிறக்க உணர்த்தி நிற்கக் காண்கின்றோம். இன்னம் நாம் அனைவரும் அன்றுடம் ஓதியுணர வேண்டிய நீதிநெறி விளக்கத்தான் ஓர் அழகான பாடலைக் காண்போம்.

''தத்தம் நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தாளூன்றி — எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.''

எனவே இவ்வகையான் ஈட்டிய பொருளை, எவ்வகையான் செலவு செய்தல் வேண்டும் என்பதற்கு, எடுத்துக் காட்டாக இதோ ஒருபாடல்.

''உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும்
உற்றபெரி யோர்கவிஞர் தமர்ஆது லர்க்குதவி
ஓங்குபுகழ் தேடவேண்டும்

மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும் உயர்மோட்ச
வழிதேட வேண்டும். அன்றி
வரிதிற் புதைத்துவைத் தியாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்.'' (அறப்பளீசுரசதகம்)

ஆகையினாலே, ''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டு, ஆவிதான் போயினபின்பு யாரே அநுபவிப்பார், பாவிகாள் அந்தப்பணம்.'' என ஔவையும் செவ்வை மொழியான் இடித்துரைக்கின்றாள். எனவேதான் நமது முன்னோர்களும் பெற்ற பொருளின்பால் பற்று வையாது, ஏதும் அற்று வருவோருக்குப் பொருளை, அருளோடு வாரிவழங்கினர். ''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற நன்மொழிக்கு இலக்கணமாக. வாழ்ந்து, மறைந்தும் மறையாத மாமலையாக, இறவாப் புகழோடு என்றும் இலங்குகின்றனர்.

''பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்; மற்று ஆதல் அரிது.'' (குறள்)

என்ற திருக்குறளை உருக்கமுடன் கற்று, அதன் வழி நின்றனர், செல்வமானது இன்று வரும். நாளை போகும். ''உடைமையும், வறுமையும் ஒருவழி நில்லா'', ''குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்'', ''சிறப்புஞ் செல்வமும் பெருமையும் உடையோர், அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்'', ''அறத்திடு பிச்சை கூவியிரப்போர், அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.'' (நறுந்தொகை) என்ற பொன்னான மொழிகளை என்னாளும் போற்றி, வாழ்ந்தனர். பொருள் இல்லாதவர் ஒருகாலத்தில் செல்வத்தால் வளம் பெறலாம். அருள் இல்லாதவர் பாவம் அருமையின் அழிந்தவரே ஆவர். பின் ஒரு காலத்தும் கடைத்தேறார். ஏன்? ''இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ''? என அஞ்சினர். மேலும்,

''எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை.'' (அறநெறிச்சாரம்)

என்பதை உணர்ந்து அருளோடும், அன்போடும் பொருளை ஈட்டி, ஈட்டிய பொருளை அருளோடு வறியோர்க்கு வாரி

வழங்கி வாழ்ந்தனர். மேலும் நாம் ''ஒல்லும் வகையான், அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செய்'' கின்ற போது அருள்வடிவான இறைவனை நினைந்து ஆற்றுதலே முறையாகும்.

''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி
வறிஞர்க் கென்றும்,
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்.''

எனச் சுந்தரத் தீந்தமிழால் கந்தரலங் காரத்திலே, இத்தரையோர் ஏற்றமுற முத்தாக அவதரித்த, முருகனருட் சீலராகிய, அருணகிரிப் பெருமான் பெருமையுறப் பாடுகின்றார். மேலும்

''தானமுந் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.'' *(ஔவையார்)*

என்பது நமது ஆன்றோர்கள் கண்ட உண்மை. எனவே நாம் இம்மையிலும் மறுமையிலும், செம்மையுடன் சீர்பெற வேண்டுமாயின் ''அருளும் பொருளும்'' ஒருங்கே பெற்றால்தான் ''தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி, அல்லல் அறுத்து ஆனந்த மாக்கும்.'' மேலும்,

''அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை; இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.''

என்னும் பொய்யா மொழியை மெய்யாய் ஓதி, நன்றாம் வழியை இன்றே எய்தி, எடுத்த புனித பிறவியை இனிதே கழித்து, இனி எடுக்கா வண்ணம் தடுக்க, ஆன்றோர்கள் காட்டிய அருள்வழியில் ஊன்றி நிற்போமாக.

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

குழைத்த பத்து

இனி, குழைத்த பத்து:

போழிப்புரை:— முற்பதிக அநுபூதி* அடியாருறவே முடியாப் பேரின்பமென முற்றினராகிப் பற்றேமென்றும் பெருமை பெருதே, ஒன்றும் பெருச் ச ரைப் போல் பணி யுமில்லான் போல, எளிமை எய்தி முன்போல், பல வழக்கின் பாய்க் குழைந்திருப்பதே பரமுத்திப் பேருன சித்தாந்த வநு பூதி யென அருளியது.

ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியதெனக் காண்க.

494. இனி, அழைப்பொழியானுக் கெதிர்ப்படாத திரு வருளென்னே வென்ற (தி. - ன.) :—

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தா லுறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேயுன் னடியேற்கே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேனை அநாதியாயுள்ள மலபோதம் என்னைத் தொடர்ந்து வாடுதற் செய்தால் அடி யேனை அத்துன்பம் தீர இரட்சியாயோ? பாவியான நான் திருவருளை விட்டுத்தற் சுட்டாய் எவ்வளவுகாலம் முயற்சி செய்தால் ஆன்ம லாபமுறுவேனே? உமைபாகா! என்னை அடிமையாக உடையோய்! அடியேன் அறியாமையால் செய்த பிழைகளத்தனையும் பொறுத்தருள வேண்டாவோ? ஞான சந்திரகலையைத் திருச்சடையில் தரித்தவனே! ஒலம்! ஒலம்! என்றழைத்தால் திருவருள் பராமுகமாமோ, திருவுளம்? எனதப்பனே! வேறடிமை யாவரையுங் கொள்வோய்! என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலை யத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரு. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

அவிநாசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு நிதி ரூ. 3000/-

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண்ணுருவாக்
கண்ட தும்மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்று திருவிளையாடற்புராணத்துப் பரஞ்சோதிமுனிவராலும்

"வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே....
துய்ய நாவலர்ச் சுந்தரர் பாடலே"

என்று தனிப்பாடலிலும்,

"போத முண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மி தப்ப வுய்த்ததோ
வாய் திறந்து முதலை கக்க மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ னக்கி யம்ப வேண்டுமே"

என்று சிவப்பிரகாசர் நால்வர்நான்மணி மாலையில் வியந்து பாராட்டியதும் ஆயமுதலையுண்ட பாலனை அழைத்த அற்புதம் நிகழ்ந்த பதியாகியதும், கொங்கு நாட்டுப்பாடல்பெற்ற தலங்களுள் ஒன்ருகியதும் ஆன திருப்புக் கொலியூர் அவிநாசி எனப்பெரும் அவிநாசி என்னும் சிவஸ்தலத்தில் ஸ்ரீ குமர குருபரசுவாமிகள் நினைவுநாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியையில், அன்னம்பாலித்தற் பொருட்டு, இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது " அவிநாசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் அன்னம் பாலிப்பு நிதி" எனப் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3000/- /ரூபா மூவாயிரம்/. இது ஆண்டொன்றுக்கு 7% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 60 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டிபாஸிட் இரசீது நெ. 076363. தேதி 21—2—1968. ரூ. 3000/- இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. இராமேசுவரம்	திருவானைக்கா	திருப்பாதிரிப்புலியூர்
கன்னியாகுமரி	திருவையாறு	விருத்தாசலம்
திருச்செந்தூர்	சுவாமிமலை	திருக்கோவலூர்
ஸ்ரீவைகுண்டம்	திருவிடைமருதூர்	திருவண்ணமலை

திருநெல்வேலி	திருப்பனந்தாள்	திருமாகறல்
பழையபாவநாசம்	வேதாரண்யம்	காஞ்சிபுரம்
திருக்குற்ருலம்	திருப்புகலூர்	திருக்கழுக்குன்றம்
உத்தரகோசமங்கை	திருவாரூர்	சென்னை
திருப்பெருந்துறை	திருநாகைக்காரோணம்	திருவொற்றியூர்
திருப்பத்தூர்	திருநள்ளாறு	வடதிருவாலங்காடு
மதுரை	காவிரிப்பூம்பட்டினம்	திருத்தணிகை
திருப்பரன்குன்றம்	ஆக்கூர்	காளஹஸ்தி
பழனி	மாயூரம்	பிரயாகை
பேரூர்	வைத்தீசுவரன்கோவில்	வாரணசி
திருநணு – பவாநி	சீர்காழி	டில்லி
திருப்பாண்டிக் கொடுமுடி	ஆச்சாள்புரம்	ஹரத்துவார்
விராலிமலை	சிதம்பரம்	ரிஷிகேசம்
திருக்கேதாரம்		

ஆக 52 தலங்களில் நம்மால் முதற்பொருள் நிறுவப்பெற்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாளில் ஆண்டுதோறும் அன்னம்பாலிப்பு நடத்தப்பெற்று வருகிறது. அங்ஙனமே இம்முதற்பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகையில் இத் தருமத்தைப் பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச் செலவுத் தொகை போக எஞ்சிய வட்டிமுழுவதும் கோயம் புத்தூர் மாவட்டத்திலுள்ள கொங்குநாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்ருகிய அவிநாசி என்னும் தலத்தில் ஸ்ரீ குமர குருபரசுவாமிகள் நினைவுநாள் ஆகிய வைகாசி அமரபக்ஷம் திருதியையில் அந்தணர், அருந்தவர் எழைகளுக்கு அன்னம் பாலித்தற் பொருட்டுச் செலவிடப்பெறும்.

4. வட்டி வருமானத்துக்கு ஏற்பவும். கால விலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடத்தப்பெற்று வரும்.

5. இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செல விடப்பெறமாட்டாது. இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக் குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம் முதற்பொருள் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக் கூடிய அரசியல் கடன்தாள்களிலோ அல்லது நிலையான முத லீடுகளிலோ முதலீடு செய்யப் பெறும்.

Tirupanandal
Dated 21-2-1968 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office as No. 12 of 1968 of Book 4 volume 54, pages 217 - 219 dated 22-2-1968.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக் கொண்ட புத்தகங்களின் விபரம் (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியர் பெயர்
11316	பொருநை நாடு (திருநெல்வேலி மாவட்டவரலாறு)	ஸ்ரீ. எம். ஜி. எம். வெளியீடு
11317	சைவானுட்டான விதியும் விளக்கங்களும்	
11318 to 21	எங்கள் பவானி	ஈரோடு வரலாற்று சங்கவெளியீடு
11322 to 24	திருமுறை கண்டபுராணம், குடமாபதி சிவாச் சாரியார் முதலிய திருநூல் ஐந்து குறிப்புரையுடன்	தருமையாதீனம்
11325	அட்டவீரட்டத் தலங்களும் அருட்பாடல்களும்	ஆனி உத்திர வெளியீடு
11326	இந்துமதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேத நூலும் இயேசுநாதரும் உணர்த்தி இருப்பதின் விளக்கம்	இந்துதர்ம பிரசார சங்கவெளியீடு
11327	விக்ரக ஆராதனையின் விளக்கம்	மதுரை ஆதீனகர்த்தரின் ஆராய்ச்சி நூல்
11328	அற்புத செயல்கள்	திருவருள் தவநெறி மறைவெளியீடு
11329 to 30	இந்தியாவும் உலகசமாதானமும்	மதுரை ஆதீனகர்த்தர் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
11331	சிந்தனையாளர்களது கேள்விகளுக்கு தெளிவுதரும் விளக்கங்கள்	மதுரை ஆதீனகர்த்தரின் சிறந்த ஆராய்ச்சி நூல்

11332	கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தன்மைகளும் உண்மையான உறவும்	Do Do
11333	மரணபயம் தீரும்வழி	Do Do
11334	இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்	திருவருள் தவநெறிமன்ற வெளியீடு,மதுரை
11335	தண்டியலங்காரம் (மூலமும் பழயஉரையும்)	பதிப்பாசிரியர். கு. சுந்தரமூர்த்தி, செந் தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள்
11336	தொல்காப்பியம் (எழுத்ததிகாரம் நச்சினர்க்கினியர் உரை)	Do Do
11337	பவானி கூடல்	திருநணு என்னும் பவானி கூடல் திருபண் ணுர் மொழியம்மை பாகத்து நண்ணு வுடைய சிவபிரான் ஸ்ரீ சங்கமேஸ்வர சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா மலர் 1967.
11338	ஆடல் வல்லான்	திருவாவடுதுறை ஆதீனம்
11339	சிவஞான பாடங்கள்	ஆசிரியர். குலசேகரன் பட்டினம் சித் தாந்த வித்தகர். வீ. குமாரவேலுப்பிள்ளை
11340	ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை	தருமையாதீனம் ஆவணிமூல விழாமலர் பிலவங்க ஆவணி 27.
11341	சகலகலா வல்லி மாலை, மூலமும் உரையும்	
11342	தீங்கனிச் சோலை	ஆத்ம ஜோதி வெளியீடு
11343	சைவ நற்சிந்தனை	Do Do

(தொடரும்)

உ

திருப்பனந்தாள் – ஸ்ரீ காசி மடம்

‘ திருமுறை வெளியீடுகள் ’

		ரூ.	பை.
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	3	50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும்	0	40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0	20
4	,, மதுரைக்கலம்பகம் ,, ...	0	40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ..	0	60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக்கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2	75
7	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1	25
8	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச்செய்யுட் கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	1	00
9	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1	00
10	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0	75
11	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0	50
12	,, - மூலம் ...	0	10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்-மூலம் ...	0	15
14	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும் ...	0	10
15	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3	00
16*	மூவர் தேவாரம் அடங்கன்முறை - தலமுறை ..	8	75
17*	திருநாவுக்கரசர் தேவாரம்	2	00
18*	சுந்தரர் தேவாரம்	1	30
19	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் மூலம் மட்டும் ...	0	56
20*	.. .. தெளிவுரை ...	1	50
21*	பதினோராந் திருமுறை ...	1	50
22*	பெரியபுராணம் (மூலம் மட்டும்) ...	3	00
23*	அகத்தியர் தேவாரத்திரட்டு ...	0	36
24	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0	25
25	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0	50
26	திருக்கயிலைத் திருமுறை ...	0	37
27	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0	19
28	பழமொழித்திருமுறை ...	0	25
29	அப்பர்விழா வெளியீடு ...	0	25
30	Hymns and Proverbs ...	0	30
31	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0	10
32	திருவாரூர் நான்மணிமாலை ...	0	50

Registered With theRegistrar of Newaspapers for India
Under No. R. No. 1485/57.

33	திருத்தொண்டர் புராணசாரம்	... 0 40
34	திருவிளையாடற்புராணம் உரை நடை	... 2 25
35	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	... 1 75
36	கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள்(மூலம்மட்டும்)	2 75
37	.. யுத்த தேவ காண்டம்	... 2 00
38	.. தக்ஷகாண்டம்	... 1 50
39	கந்தபுராண உரைநடை	... 3 00
40	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	... 0 25
41	கந்தரனுபூதி தெளிவுரை	... 0 35
42	ஐந்து நீதி நூல்கள்	... 0 10
43	நவக்கிரகமாண்பு	... 0 25
44	ஸ்ரீ சயிலம்	... 0 10
45	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	... 0 37
46	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	... 0 10
47	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	... 1 50
48	திருக்குறள்-பொருட்பால் ..	... 2 50
49	திருக்குறள் - காமத்துப்பால் ..	... 1 00
	ஷை 47. 48. 49 திருக்குறள் 3புத்தகமும்	... 4 00
50	திருவருட்பயன் மூலம் இந்தி. ஆங்கில மொழிபெயர்ப்புடன்	1 00
51	திருக்குறள்-உரைக்கொத்து-பொருட்பால் 2-ம் பதிப்பு	2 75
52	தாயுமானசுவாமிகள் பாடல் குறிப்புரையுடன்	... 1 25
53	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும்	... 0 30
54	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	... 0 13
55	செந்திலாண்டவன் மகிமை	... 0 15

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்க்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.
   "தியாகராஜ விலாசம்" 58. பிள்ளையார் கோயில்தெரு,
   திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் எண் 51, 52 தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்-'68